பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

13 10 2026 TUEDSDAY 7 15 AM

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிம்ஸ்டெக் நாடுகளின் உள்துறை அமைச்சர்கள் மாநாடு, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

2. வேளாண் வளர்ச்சியை விரைவுபடுத்த மாவட்ட அளவிலான திட்டமிடல் அவசியம் என மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு ஷிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

3. தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள், தொழில் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிப்பதுடன், இளையோருக்கு வேலைவாய்ப்பை அதிகரிக்கும் என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

4. விண்வெளி, அணுசக்தி உள்ளிட்ட துறைகளில் இங்கிலாந்துடனான ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

5. தேசிய சீனியர் ஹாக்கி போட்டியில், பீகார், ராஜஸ்தான், மிசோரம் அணிகள் வெற்றி பெற்றன.

>>>>>><<<<<<

பிம்ஸ்டெக் நாடுகளின் உள்துறை அமைச்சர்கள் மாநாடு, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

வங்கக் கடல் பகுதியில் உள்ள தெற்காசிய நாடுகளின் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான பிம்ஸ்டெக் கூட்டமைப்பின் உள்துறை அமைச்சர்கள் இதில் பங்கேற்கின்றனர்.

முதல்முறையாக நடைபெறும் இந்த மாநாட்டில், தீவிரவாத ஒழிப்பு, குற்றங்களை தடுத்தல், போதைப்பொருள் ஒழிப்பு உள்ளிட்டவற்றில் ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

இதுகுறித்து, திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், சட்டவிரோத நடவடிக்கைகளை தடுப்பதில் ஒருங்கிணைந்து செயல்படும் இந்தியாவின் உறுதிப்பாட்டை இந்த மாநாடு பிரதிபலிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பான – வலிமையான பிம்ஸ்டெக் மண்டலத்தை உருவாக்க இந்தியா உறுதிபூண்டுள்ளதாக திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

வேளாண் வளர்ச்சியை விரைவுபடுத்த மாவட்ட அளவிலான திட்டமிடல் அவசியம் என மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு ஷிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

வேளாண் வளர்ச்சியில் பின்தங்கிய 100 மாவட்டங்களில் வளர்ச்சியை அதிகரிப்பதற்கான திட்டத்தில் சிறப்பாக செயல்பட்ட மாவட்டங்களுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சி மற்றும் மாநாடு புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இதில் பேசிய அமைச்சர், அரசு திட்டங்களை ஒருங்கிணைந்து செயல்படுத்தி, வேளாண் வளர்ச்சியை விரைவுபடுத்துவதில் மாவட்ட ஆட்சியர்களின் பங்கு முக்கியமானது என்று தெரிவித்தார்.

நீர் சேமிப்பு, இயற்கை விவசாயம் ஆகியவற்றில் புதுமையான நடைமுறைகளை ஊக்குவிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

உறுதியுடன் செயல்பட்டால் எந்தவொரு இலக்கையும் எளிதில் எட்ட முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

வேளாண் ஆராய்ச்சி முடிவுகளை களத்தில் செயல்படுத்தி, விவசாயிகள் பயனடைய வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வரவதாக திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறினார்.

>>>>>><<<<<<

கர்நாடகா மற்றும் மஹாராஷ்ட்ரா மாநிலங்களில், கரும்பு விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்து உயர்நிலைக்குழு அமைக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அம்மாநிலங்களின் விவசாய சங்க பிரதிநிதிகளுடன் மத்திய அமைச்சர்கள் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் மற்றும் திரு. பிரல்ஹாத் ஜோஷி, புதுதில்லியில் நேற்று பேச்சு நடத்தினர்.

அப்போது பேசிய திரு. பிரல்ஹாத் ஜோஷி, ஒரு வார காலத்திற்குள் இந்த குழு அமைக்கப்படும் என்று தெரிவித்தார்.

இக்குழுவில் மஹாராஷ்ட்ரா மற்றும் கர்நாடக மாநிலங்களைச் சேர்ந்த சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் இடம்பெறுவார்கள் என்று அவர் கூறினார்.

விவசாயிகளின் நலன்களை காக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

வடகிழக்கு மாநிலங்களில் மேம்பாட்டிற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து செயல்படுவதாக வடகிழக்கு மாநிலங்கள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

மிஸோரமில் 331 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

பின்னர் மிஸோரம் பல்கலைக் கழகத்தில் மாணவர்களுடன் கலந்துரையாடிய அவர். நடப்பு நிதியாண்டில் வடகிழக்கு மாநிலங்களின் மேம்பாட்டிற்காக 6 ஆயிரத்து 812 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

மிஸோரமில் உள்கட்டமைப்புகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் தொழில் மற்றும் சுற்றுலா வளர்ச்சி அதிகரித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், இம்மாநிலத்திற்கு ஐந்து லட்சத்திற்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் வந்துள்ளதாகவும், இது முன்னெப்போதும் இல்லாத சாதனை என்றும் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள், தொழில் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிப்பதுடன், இளையோருக்கு வேலைவாய்ப்பை அதிகரிக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

தில்லியில் நடைபெற்ற வர்த்தக மாநாட்டில் பேசிய அவர், உலகளாவிய பொருளாதார சவால்களுக்கு இடையிலும் இந்திய பொருளாதாரம் வலுவான நிலையில் உள்ளது என்று கூறினார்.

2047ஆம் ஆண்டுக்குள் நாட்டின் பொருளாதாரம், 30 ட்ரில்லியன் டாலர் என்ற அளவை எட்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு, தொழில்நுட்பம், சுற்றுலா, வாகன உற்பத்தி உள்ளிட்ட துறைகளில் இந்தியாவில் வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உலகளாவிய வாகன உற்பத்தி மையமாக இந்தியா மாறிவருவதாக திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

விண்வெளி, அணுசக்தி உள்ளிட்ட துறைகளில் இங்கிலாந்துடனான ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இந்தியா வந்துள்ள இங்கிலாந்து வர்த்தகத் துறை அமைச்சர் திரு. Jonathan Reynolds-னுடன் இணைந்து இருநாடுகளுக்கும் இடையேயான எட்டாவது அறிவியல் தொழில்நுட்ப ஒத்துழைப்பு கவுன்சில் கூட்டத்தில் அவர் பங்கேற்றார்.

அப்போது பேசிய டாக்டர் ஜிதேந்திர சிங், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் இருநாடுகளும் இணைந்து செயல்பட அதிக வாய்ப்புகள் உள்ளதாக கூறினார்.

பருவநிலை மாற்றம், வேளாண்மை, சுகாதாரம், செயற்கை நுண்ணறிவு, உயிரி தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு உள்ளிட்டவற்றில் இருநாடுகளும் ஏற்கனவே

இணைந்து செயல்பட்டு வருவதாகவும், இதனை மேலும் வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையே கலாச்சார பரிவர்த்தனையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டுள்ளதாக மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

இந்த கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகள் பங்கேற்கும் நாடக திருவிழாவை புதுதில்லியில் நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த விழா, நாடகக் கலையை ஊக்குவிக்க வகைசெய்யும் என்று அவர் தெரிவித்தார்.

எல்லைகளை கடந்து, இதுபோன்ற விழாக்கள் நடைபெறுவது கலாச்சாரத்தை ஒருங்கிணைப்பதாக அவர் கூறினார்.

வரலாறு, மொழி மற்றும் மரபுகள் வெவ்வேறாக இருந்தாலும், நாடகம் உள்ளிட்ட கலைகள் அனைவரையும் ஒருங்கிணைப்பதாக திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மலைப்பகுதிகள் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் மருத்துவக் கட்டமைப்புகளை மேம்படுத்த மத்திய அரசு உயர்முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருவதாக சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

ஹிமாச்சலப் பிரதேசத்தின் Keelang மலைப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தை அவர் நேற்று தொடங்கி வைத்தார்.

பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் நோய்கள் மற்றும் மலைப்பகுதிகளில் மக்களுக்கு ஏற்படும் நோய்கள் குறித்து தனித்துவமான ஆராய்ச்சிகளை இந்த மையம் மேற்கொள்ளும் என்று அவர் கூறினார்.

உள்ளூர் மக்கள் மற்றும் பாதுகாப்பு படையினரின் நலவாழ்வை உறுதி செய்வதில் இந்த மையம் முக்கியப் பங்காற்றும் என்று அவர் தெரிவித்தார்.

ஹிமாச்சலப்பிரதேசம், ஜம்மு கஷ்மீர், லடாக், உத்ராகண்ட், சிக்கிம் மற்றும் அருணாச்சலப்பிரதேசத்தின் இமயமலைப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த மையம் அமைக்கப்பட்டுள்ளதாக திரு. ஜெ.பி. நட்டா கூறினார்.

>>>>>><<<<<<

மீன்வளம் மற்றும் கால்நடைத்துறையில் இங்கிலாந்து உடனான ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்று மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் கூறியுள்ளார்.

இந்தியா வந்துள்ள இங்கிலாந்து உணவு மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் Angela Eagle-னுடன் நேற்று அவர் பேச்சு நடத்தினார்.

கால்நடை மருத்துவம், ஆராய்ச்சி, மரபணு மற்றும் மேம்பட்ட இனப்பெருக்க தொழில்நுட்பங்களில் இருநாடுகளும் சிறந்த நடைமுறைகளை பகிர்ந்து கொள்ள வேண்டும் என திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் அப்போது தெரிவித்தார்.

>>>>>><<<<<<

கனடா வெளியுறவு அமைச்சர் Anita Anand இன்று இந்தியா வருகிறார்.

தமது பயணத்தின் போது அவர் வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருடன், இருதரப்பு உறவுகள் குறித்து விரிவான ஆலோசனை நடத்தவுள்ளார்.

பல்வேறு சர்வதேச விவகாரங்கள் குறித்தும், வர்த்தகம், எரிசக்தி, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்தும் Anita Anand அமைச்சருடன் பேச்சு நடத்தவுள்ளார்.

>>>>>><<<<<<

பீகாரில் கல்வி, சுகாதாரம், மகளிர் மேம்பாடு உள்ளிட்டவை தொடர்பாக 23 திட்டங்களை செயல்படுத்த மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பாட்னாவில் முதலமைச்சர் திரு. சாம்ராட் சௌத்ரி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர், மாநிலத்தின் வளர்ச்சிக்காக மத்திய அரசு உறுதுணையாக இருந்து வருவதாக கூறினார்.

மாநிலத்தில் கடந்த 2014ஆம் ஆண்டு 13 மருத்துவக் கல்லூரிகள் மட்டுமே இருந்ததாகவும், தற்போது அது 31ஆக அதிகரித்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

அரசு நிர்வாக தலைமைப் பொறுப்பில், 25 ஆண்டுகாலத்தை கடந்து பிரதமர் திரு. நரேந்திர மோடி பணியாற்றி வருவதற்கு அமைச்சரவைக் கூட்டத்தில் வாழ்த்து தெரிவிக்கப்பட்டதாக திரு. சாம்ராட் சௌத்ரி கூறினார்.

>>>>>><<<<<<

ஆந்திர மாநிலம், திருப்பதியில் வசதிகளை மேலும் மேம்படுத்த மாநில அரசு உறுதிபூண்டுள்ளதாக முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

திருப்பதியில் மூவாயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான மேம்பாட்டுத் திட்டங்களுக்கு காணொலி மூலம் நேற்று அவர் அடிக்கல் நாட்டி பேசினார்.

இந்த திட்டங்கள், யாத்திரிகர்களுக்கான தங்குமிடம், போக்குவரத்து மற்றும் மருத்துவ சேவைகளை மேலும் எளிதாக்கும் என்று அவர் கூறினார்.

நவீன தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுற்றுலா ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் உலகத்தரம் வாய்ந்த ஆன்மிக தலமாக திருப்பதி மேம்படுத்தப்படும் என்று திரு. சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தேசிய சீனியர் ஹாக்கி போட்டியில், பீகார், ராஜஸ்தான், மிசோரம் அணிகள் வெற்றி பெற்றன.

Jhansi-யில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மூன்றாம் நாளான நேற்று, பீகார் அணி 4-3 என்ற கோல்கணக்கில் ஆந்திராவை வென்றது.

ராஜஸ்தான் 6-2 என்ற கோல்கணக்கில் குஜராத்தை வென்றது.

மிஸோரம் அணி 2-1 என்ற கோல்கணக்கில் ஜம்மு கஷ்மீரை வென்றது.

கேரளா – சத்திஷ்கர் மற்றும் ஜார்க்கண்ட் - தெலங்கானா அணிகளுக்கு இடையேயான ஆட்டங்கள் டிராவில் முடிவடைந்தன.

>>>>>><<<<<<

போர்ச்சுக்கல் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்மித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>END<<<<<<<